DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.95/2021

Prosecution side witness for P.W.13

| | | | | |
|---|---|---|---|---|
| Name | ... **டாக்டர். திரு. உதயகுமார்.** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **30.01.2026**

Accused is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:-</u>

நான் கடந்த 8 வருடங்களாக தூத்துக்குடி அரசுமருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் மூத்த உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.08.2020 அன்று அதே துறையில் பணியாற்றியபோது தட்டார்மடம் காவல்நிலைய குற்ற எண். 175/2020 வழக்கில் இறந்துபோன துரைராஜ் வயது 43 என்ற ஆண் பிரேதத்தை பிணகூறாய்வு மேற்கொள்ள முதல்நிலை காவலர் 58 சர்ஜான் என்பவர் ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தை என்னிடம் அளித்தார். அந்த வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ- 21** ஆகும். அன்று மதியம் 2.00 மணியளவில் பிணகூறாய்வை மேற்கொண்டேன். அந்த பிரேதத்தின் உடலில் கீழ்பகுதி மட்டும் பிணவிறைப்பு தன்மை காணப்பட்டது. உடல் மிதமான போசாக்குடனும், கை, கால் விரல்கள் நீலநிறத்திலும் காணப்பட்டன. கீழ்கண்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள்பின்வருமாறு

காயம் எண். 1 – 2 செ.மீ x 2 செ.மீ அளவிலான சிவந்த நிற சிராய்ப்பு காயம் இடது முன்கையின் கீழ்பகுதியில் காணப்பட்டது.

காயம் எண். 2 – 2 செ.மீ x1 செ.மீ அளவிலான சிவந்த நிற சிராய்ப்பு காயம் இடது மணிக்கட்டின் பின்பகுதியில் காணப்பட்டது.

காயம் எண். 3 – 3 செ.மீ x1 செ.மீ அளவிலான சிவந்த நிற சிராய்ப்பு காயம் வலது கால் முட்டியில் காணப்பட்டது.

காயம் எண். 4 – 3 செ.மீ x2 செ.மீ அளவிலான சிவந்த நிற சிராய்ப்பு காயம் வலது கால் முட்டியின் பின்பகுதியில் வெளிப்புறத்தில் காணப்பட்டது.

காயம் எண். 5– 2 செ.மீ x2 செ.மீ அளவிலான சிவந்த நிற சிராய்ப்பு காயம் இடது கால் முட்டியின் உட்பகுதியில் காணப்பட்டது.

காயம் எண். 6 – 4 செ.மீ x 2 செ.மீ அளவிலான சிவந்த நிற சிராய்ப்பு காயம் வலது மேற்கையின் கீழ்புறத்தில் வெளிப்பகுதியில் காணப்பட்டது.

காயம் எண். 7 – 3 செ.மீ x 2 செ.மீ அளவிலான சிவந்த நிற சிராய்ப்பு காயம் வலது கணுக்காலின் உட்பகுதியில் காணப்பட்டது.

காயம் எண். 8 – 10 செ.மீ x 3 செ.மீ அளவிலான சிவந்த நிற கன்றிய காயம் இடது பக்க நெஞ்சின் பின்பகுதியில் மேற்புறத்தில் காணப்பட்டது.

காயம் எண். 9 – 6 செ.மீ x 2 செ.மீ x எலும்பு அளவு ஆழமுடைய கிழிந்த வலது கண்புருவத்தில் காணப்பட்டது. அதனை பகுப்பாய்வு செய்ததில் அதன் அடியில் உள்ள எலும்புகள் முறிந்து காணப்பட்டது.

காயம் எண். 10 – 5 செ.மீ x 3 செ.மீ x எலும்பு அளவு ஆழமுடைய கிழிந்த காயம் வலது பக்க கபாலத்தின் பக்கவாட்டு பகுதியில் காணப்பட்டது.

காயம் எண். 11 – 3 செ.மீ x 1 செ.மீ x தசை அளவு ஆழமுடைய கிழிந்த காயம் வலது காதின் பின்பகுதியில் காணப்பட்டது.

கபாலம்,கபால எலும்பு, மூளையை சுற்றியுள்ள ஜவ்வு ஆகியவற்றை பகுப்பாய்வு செய்ததில் 20 செ.மீ x14 செ.மீ அளவிலான சிவந்த நிற கன்றிய காயம் வலது பக்க கபாலத்தின் முன் உச்சி மற்றும் பக்கவாட்டு பகுதியில் காணப்பட்டது. 5 செ.மீ x 2 செ.மீ x1 செ.மீ அளவிலான அமுங்கிய எலும்பு முறிவு வலது பக்க கபாலத்தின் முன்பக்கத்தில் காணப்பட்டது. மூளையை சுற்றிய ஜவ்வின் நடுச்சவ்விற்கு மேற்புறத்திலும், கீழ்புறத்திலும் இரத்தம் பரவலாக கசிந்து காணப்பட்டது. வலது பக்க கபாலத்தின் அடிப்பகுதி எலும்பு உடைந்து காணப்பட்டது.

வயிற்றறை,நெஞ்சறை காலியாக காணப்பட்டது. இருதயத்தை சுற்றிய ஜவ்வில் 10 மில்லி அளவுடைய வெளிர் மஞ்சள் திரவம் காணப்பட்டது. இருதயம் சாதாரணமாகவும், இருதய தமனி சாதாரணமாகவும் காணப்பட்டது. மூச்சுக்குழல் மற்றும் உணவுக்குழல் சாதாரணமாக காணப்பட்டது. நாவடி எலும்பு சாதாரணமாக காணப்பட்டது. நுரையீரல்கள், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் சாதாரணமாகவும், அதன் வெட்டுத்தோற்றம் இரத்தம்செரிந்தும் காணப்பட்டது. வயிற்றில் 100 மில்லி அளவுடைய பழுப்பு நிற திரவம் எவ்வித நெடியுமின்றி காணப்பட்டது. அதன் ஜவ்வு இரத்தம் செரிந்தும் காணப்பட்டது. சிறுகுடலில் 30 மில்லி அளவுடைய பழுப்பு நிற திரவம் எவ்வித நெடியுமின்றி காணப்பட்டது. அதன் ஜவ்வு இரத்தம் செரிந்தும் காணப்பட்டது. அவருடைய பிறப்புறுப்புகள் சாதாரணமாக காணப்பட்டது.

குறிப்பு – 1)அவருடைய உள்ளுறுப்புகளை இரசாயன பகுப்பாய்விற்காக சேகரித்து அனுப்பி வைத்தேன். 2) அவருடைய இரத்தமாதிரியை உயிரியல் பகுப்பாய்விற்காக சேகரித்து அனுப்பி வைத்தேன். அதனால் அவருக்கு ஏற்பட்ட கபாலம் மற்றும் மூளைகாயத்தின் விளைவாக பிரேதபரிசோதனைக்கு முன் 24 மணியிலிருந்து 36 மணிக்குள் அவர் இறந்திருக்கக்கூடும் என்றும், எனது இறுதி கருத்துரையை இரசாயன பகுப்பாய்வு வந்தபின் அளிக்கப்படும் என்றும் என்னுடைய முதல்நிலை கருத்துரையை 18.08.2020 அன்று வழங்கினேன். அந்த முதல்நிலை கருத்துரை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 22** ஆகும். இரசாயன பகுப்பாய்வு அறிக்கை 29.09.2020 அன்று கிடைக்கப்பெற்றது அது TIN/TOX.H/1917/2020 dated: 18.09.2020 RFSL அதன்படி அவரது உடலில் எவ்வித நச்சுபொருளும் காணப்படவில்லை. அந்த அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 23** ஆகும். அதன்பேரில் எனது இறுதி கருத்துரையாக மேற்படி இறந்தவரின் மரணமானது கபாலம் மற்றும் மூளைகாயத்தின் விளைவாக பிரேதபரிசோதனைக்கு முன் 24 மணியிலிருந்து 36 மணிக்குள் அவர் இறந்திருக்கக்கூடும் என்றும், எனது இறுதி கருத்துரை 29.09.2020 அன்று வழங்கினேன். அந்த இறுதி கருத்துரை சான்றிட்ட நகல் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 24** ஆகும். இறந்துபோனநபரை விறகு கட்டையான அ.சா.பொ.1,2 ஆல் ஒன்றுக்குமேற்பட்ட நபர்கள் மாறி மாறி தாக்கப்படும்போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)

உயரமான இடத்திலிருந்து மதுபோதையில் கீழே விழும்போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் இல்லை. விபத்தில் சிக்கியிருந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் கருத்துகூற இயலாது. விபத்தில் சிக்கினால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றுசொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.95/2021

Prosecution side witness for P.W.14

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. வீரபாண்டி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **30.01.2026**

Accused is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:–</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம், தட்டார்மடம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது என்னுடைய காவலர் எண். 444 ஆகும். கடந்த 16.08.2020 ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு தட்டார்மடம் காவல்நிலைய குற்ற எண். 175/2020 சட்டபிரிவு 302 இதச வழக்கில் உதவி ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி அசல் முதல்தகவல் அறிக்கை அடங்கிய விரைவு தபாலை சாத்தான்குளம் நீதிமன்றத்தில் ஒப்படைக்க எனக்கு கடவுச்சீட்டு பெற்று மேற்படி துரித தபாலை அன்றையதினம் சாத்தான்குளம் நீதிமன்றத்தில் 17.08.2020 அன்று அதிகாலை 12.05 மணிக்கு ஒப்படைத்து ஒப்பம் பெற்று நிலையம்வந்து அறிக்கை செய்தேன். அது சம்மந்தமாக பணிஒதுக்கப்பட்டு எனக்குவழங்கப்பட்ட கடவுச்சீட்டு என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 25** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)</u>

நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த பணியும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.